தமிழ் மொழிப்பெயர்ப்பு

RG/MBD/1/Circular

2021.03.29

சுற்றுநிருபம் இலக்கம் 08/2021

அனைத்து பிரதேச செயலாளர்/ மாவட்டப் பதிவாளர்கள்,

காணிப் பதிவாளர் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்.

**பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கல் கட்டணங்கள் மற்றும் பிரதிக்கினைக்கான கட்டணங்களினை திருத்துதல்.**

2019 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக 2021.03.01 ந் திகதிய அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளமையினால், 2021.04.01 ந் திகதி தொடக்கம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் சம்பந்தமாக திருத்தப்பட்ட கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| | விடயம் | திருத்தப்பட்ட கட்டணங்கள் |
|---|---|---|
| 1. | உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்காக விண்ணப்பிக்கும் பொழுது ஆவணங்கள் தேடுதல் அவசியமற்ற சந்தர்ப்பத்தில், உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது சுருக்கப்பிரதி அல்லது பதிவு செய்யப்படாமைக்கான சான்றிதழினை வழங்குவதற்காக | ரூ.120.00 |
| 2. | உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்காக விண்ணப்பிக்கும் பொழுது 02 வருடங்களுக்கு மேற்படாத காலங்களுக்கு ஆவணங்கள் தேடுதல் அவசியமான சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது சுருக்கப்பிரதி அல்லது பதிவு செய்யப்படாமைக்கான சான்றிதழினை வழங்குவதற்காக | ரூ.250.00 |
| 3. | பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின் 27, 27அ, 52 ஆம் பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படும் பிரதிக்கினைப் பத்திரங்களுக்கு ஒரு பிரதிக்கினைக்காக | ரூ.60.00 |
| 4. | பிறந்து 3 மாதங்கள் கடந்த காலங்கடந்த பிறப்பினை பதிவு செய்வதற்கான 24 ஆவது பிரிவின் கீழான பிரதிக்கினைக்காக | ரூ.60.00 |
| 5. | இறப்பெய்து 3 மாதங்கள் கடந்த காலங்கடந்த இறப்பினைப் பதிவு செய்வதற்கான 36 ஆவது பிரிவின் கீழான பிரதிக்கினைக்காக | ரூ.60.00 |

02. மேலும் மேற்குறிப்பிடப்பட்ட கட்டணங்களினை திருத்துதல் சம்பந்தமாக தங்களது அதிகாரப் பிரதேசத்தின் அனைத்து விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பொது மக்கள் அறிந்துக் கொள்வதற்காக இந்த திருத்தக் கட்டணம் பற்றிய அறிவித்தலினை தங்களது அலுவலகத்தில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ டப்ளியூ.எம்.எம்.பி.வீரசேகர

பதிவாளர் நாயகம்

டப்ளியூ.எம்.எம்.பி.வீரசேகர
பதிவாளர் நாயகம்
பதிவாளர் நாயகம் திணைக்களம்
இல.234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

பிரதிகள்

1. செயலாளர், அரச பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு - தகவலுக்காக
2. பணிப்பாளர் நாயகம், அரச நிதி திணைக்களம் - தகவலுக்காக
3. கணக்காய்வதிபதி - தகவலுக்காக
4. அனைத்து மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக
5. தலைமை கணக்காளர் - உரிய நடவடிக்கைக்காக
6. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்கள் - தகவலுக்காக
7. அனைத்து வலய பொறுப்பு பிரதி / உதவி பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக
8. அனைத்து மாவட்டப் பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக
9. உதவி பணிப்பாள், தகவல் தொழிநுட்பட் - வெப்தளத்தில் இற்றைப்படுத்துவதற்காக